
## இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண்போல் காக்கும்

# மு.க.ஸ்டாலினின் கடமை உணர்வு கண்டு வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!



### ‘முப்பெரும் விழா’வில் முத்தமிழறிஞர் கலைஞர் உரையாற்றுவது போன்ற வீடியோ

### ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் ஒளிபரப்பு ! காண்போரை மெய்சிலிர்க்க வைத்த காட்சி !

**சென்னை,செப்.19–**

**சென்னை – நந்தனம் – ஒய்.எம்.சி.ஏ., திடலில் நேற்று முன்தினம் மாலை, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியனின் பிரம்மாண்டமான நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்ற “கழகத்தின் மாபெரும் முப்பெரும் விழா” நிகழ்வின் தொடக்கத்தில் – ‘ஏ.ஐ.’ (AI) எனப்படும் ‘செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில்’ தயாரிக்கப்பட்ட வீடியோ ஒன்று ஒளிபரப்பப் பட்டது.**

காண்போர் கண்களுக்கு விருந்தாக, மெய்சிலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்த அந்த வீடியோவில் – கழக முப்பெரும் விழாவின் வரலாறும் சிறப்பும் விவரிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, தமிழினத் தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வாழ்த்தி உரையாற்றுவது போன்ற வீடியோ ஒளிபரப்பானது.

அதில் “இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண்போல் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் கடமை உணர்வு கண்டு பாராட்டுகின்றேன்! வாழ்த்துகிறேன்!” – என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அவ்வுரை வருமாறு :

**“என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே!**

**தந்தை பெரியார் வடித்த கொள்கையை, பேரறிஞர் அண்ணா வகுத்த பாதையை, என்னால் கட்டிக் காக்கப் பட்ட இனமான முரசத்தை, ஓங்கி ஒலிக்கச் செய்து, கம்பீரமாகக் கழகத்தை ஆட்சிப் பொறுப்பில் அமரச் செய்திருக்கும் தம்பி மு.க.ஸ்டாலின் அவர்களை எண்ணி எண்ணி என் நெஞ்சம் பெருமிதம் கொள்கிறது.**

**ஸ்டாலின் என்றாலே உழைப்பு!**

**உழைப்பு! உழைப்பு! உழைப்புதான்!**

**கழகக் களப்பணியில் 55 ஆண்டுகளாய் அயராது உழைக்கும் அவர், “திராவிடச் செம்மலாய்”, இந்தியாவின் முன்மாதிரி முதல்வராய், “நல்லுலகம் போற்றும் நாயகராய்” விளங்குகிறார்.**

**சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி இவற்றின் பாதையில் கழக ஆட்சியை சிறப்பாக வழிநடத்துகிறார்.**

**இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண்போல் காக்கும் அவரது கடமை உணர்வைக் கண்டு நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.**

**வாழ்க பெரியார், அண்ணாவின் புகழ்!**

**ஓங்குக திராவிட மாடல் அரசு!!’’**

இவ்வாறு – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உரையாற்றுவது போல, ‘ஏ.ஐ.’ (AI) தொழில் நுட்பத்தில்’ காட்சி வடிவமைக்கப்பட்டிருந்தது.



கழகத் தலைவரும். தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.9.2024) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், பெரியார் விருதினை திருமதி பாப்பம்மாள் அவர்களுக்கும், அண்ணா விருதினை மிசா இராமநாதன் அவர்களுக்கும். கலைஞர் விருதினை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும். பாவேந்தர் விருதினை கவிஞர் தமிழ்தாசன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதினை வி.பி. இராஜன் அவர்களுக்கும், மு.க. ஸ்டாலின் விருதினை ஒன்றிய முன்னாள் இணை அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு. கழக துணை பொதுச் செயலாளர்கள் – ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, ஆ. ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள். கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகுவது பலரை மிரளச் செய்துள்ளது

# ராகுல் காந்திக்கு பாதுகாப்பை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும்!

### பா.ஜ.க. – ஷிண்டே சேனாவின் அச்சுறுத்தலுக்கு கண்டனம் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, செப்.19–**

**எனது சகோதரர் ராகுல் காந்திக்கு மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் வெகுவாக பலரை மிரளச் செய்துள்ளது. எனவே எனது சகோதரர் ராகுல் காந்திக்கு ஒன்றிய அரசு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. ஷிண்டே சேனா கட்சியினரின் அச்சுறுத்தலுக்கு கண்டனம் தெரிவித்து சமூக வலை தளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இன்று (18.09.2024), திராவிட முன்னேற்றக் கழகத்தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:–

பா.ஜ.க. தலைவர் ஒருவர் “ராகுல் காந்தி அவர்களின் பாட்டிக்கு நேர்ந்த கதிதான் அவருக்கும் நேரும்” எனவும், ஷிண்டே சேனாவின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் “ராகுல் காந்தி அவர்களின் நாக்கை அறுப்பவருக்குப் பரிசு” எனவும், இன்ன பிற வகைகளிலும் மிரட்டல் விடுத்திருப்பதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகள் மிகவும் அதிர்ச்சியளிக் கின்றன.



எனது சகோதரர் ராகுல் காந்தி அவர்களை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுவதும், நாளுக்கு நாள் அவருக்குக் கூடி வரும் பொதுமக்களின் ஆதரவும் பலரையும் மிரளச் செய்துள்ளதன் தொடர்ச்சியாகவே இத்தகைய அச்சுறுத்தல்கள் விடுக்கப்படு கின்றன.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அச்சுறுத்தலுக்கும் வன்முறைக்கும் நமது மக்களாட்சியில் இடமில்லை என்பதை உறுதிப் படுத்த வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



# முரசொலியின் வரலாறு!

- மாணவர் நேசன் 1941ல் கைப்பிரதி தொடங்கப்பட்டது.
- முரசொலி மாதம் இருமுறை 10.8.1942 தொடக்கம்.
- முரசொலி வார ஏடாக 14.1.1948–ல்
- பெரியார் பிறந்த இந்நாளில் தான் 17.9.1960 நாளிதழாக மலர்ந்தது.
- இந்நாள் செப்டம்பர் பெரியார் பிறந்த நாள் 17.9.1879.
- கழகம் தொடங்கப்பட்ட நாள் 17.9.1949
- முரசொலி நாளிதழாக மலர்ந்த நாள் 17.9.1960



இராணிப்பேட்டை மாவட்டம்நெமிலிஅருகில்உள்ள ரெட்டிவலத்தில் நடந்த தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்புரை ஆற்றினார். அருகில் மாநில சுற்றுச்சூழல் அணிதுணை அமைப்பாளர் ஆர்.விநோத் காந்தி,அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ மாவட்ட துணை அமைப்பாளர்கள் சிவானந்தம், குமுதாகுமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி திருமூர்த்தி, மற்றும் மாவட்ட நகர, ஊராட்சி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கழக அளவில்

# மாணவர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ள வடக்கு மாவட்டச் செயலாளர் பி. கீதா ஜீவன் அறிக்கை!

*தூத்துக்குடி, செப். 19-*

தி.மு.கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக மாணவர் அணியின் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அளவில் மாணவர் அணிக்கு நிர்வாகிகளை நேர்காணல் மூலம் தேர்வு செய்திட கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்கள்.



அவரது அறிவிப்புக்கு இணங்க தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவில் மாணவர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான நேர்காணல் நாளை (20.08.2024-வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் வைத்து நடைபெற இருக்கிறது.

நகரம், ஒன்றியம், பகுதி, பேரூர் கழக அளவில் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு 30 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமே நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்பு (அல்லது) பட்டயபடிப்பு படித்திருக்க வேண்டும். கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழக அளவில் மாணவர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக 5 பேரும் தேர்வு செய்யப்படுவார்கள். இதில் ஒரு துணை அமைப்பாளர் மகளிராகவும், ஒரு துணை அமைப்பாளர் கல்லூரி அல்லது பட்டய படிப்பு படித்து கொண்டிருப்பராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணலில் சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட மாணவரணி தோழர்கள் கலந்து கொள்ளவும் அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.